www.Padasalai.Net www.TrbTnpsc.com

10 C

Register No

# மூன்றாம் திருப்புதல் தேர்வு – 2025

காலம் : 3.00 மணி நேரம் **தமிழ்** மதிப்பெண்கள் : 100

## பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். II) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15x1=15

1. காய்ந்த இலையும், காய்ந்த தோகையும் நிலத்திற்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடப்படுவது:
(அ) தோகையும் சண்டும் (ஆ) இலையும் சருகும்
(இ) சருகும் சண்டும் (ஈ) தாளும் ஓலையும்
2. "பாட்டுக்கொரு புலவன்" எனப் பாராட்டப்பட்டவர்
(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) வாணிதாசன் (ஈ) கண்ணதாசன்
3. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்று கொன்றை வேந்தனில் பாடியவர்:
(அ) இளங்கோவடிகள் (ஆ) ஔவையார் (இ) கம்பர் (ஈ) தொல்காப்பியர்
4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா (ஆ) சீலா (இ) குலா (ஈ) இலா
5. அருந்துணை என்பதைப் பிரித்தால்
(அ) அருமை + துணை (ஆ) அரு + துணை
(இ) அருமை + இணை (ஈ) அரு + இணை
6. மலர் காம்புகளின் கழுத்து முறியும் எப்பொழுது?
(அ) அள்ளி முகர்ந்தால் (ஆ) தளரப் பிணைத்தால்
(இ) இறுக்கி முடிச்சிட்டால் (ஈ) தரையில் விழுந்தால்
7. சோழ நாட்டில் ........ மட்டுமே பிணிக்கப்படுவன
(அ) மக்கள் (ஆ) மான்கள் (இ) யானைகள் (ஈ) குதிரைகள்
8. இருநாட்டு அரசர்களும், தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்
(அ) நாட்டைக் கைப்பற்றல் (ஆ) ஆநிரை கவர்தல்
(இ) வலிமையை நிலைநாட்டல் (ஈ) கோட்டையை முற்றுகையிடல்
9. சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
(அ) அகவற்பா (ஆ) வெண்பா (இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா
10. 'எய்துவர் எய்தாப் பழி' இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
(அ) கூவிளம் தேமா மலர் (ஆ) கூவிளம் புளிமா நாள்
(இ) தேமா புளிமா காசு (ஈ) புளிமா தேமா பிறப்பு
11. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடுகாக்க என்று ............ வேண்டினார்.
(அ) கருணையன் எலிசபெத்துக்காக (ஆ) எலிசபெத் தமக்காக
(இ) கருணையன், பூக்களுக்காக (ஈ) எலிசபெத் பூமிக்காக

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.**

"பகர்வனர் திரிதரு நகர வீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) நீதிவெண்பா ஆ) சிலப்பதிகாரம் இ) கம்பராமாயணம் ஈ) மெய்க்கீர்த்தி


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

13. 'காருகர்' என்பதன் பொருள் ..............
அ) வெற்றிலை விற்பவர் ஆ) சிற்பி இ) நெய்பவர் ஈ) ஓவியர்

14. இப்பாடலின் ஆசிரியர் யார் ?
அ) பரஞ்சோதி முனிவர் ஆ) கம்பர் இ) இளங்கோவடிகள் ஈ) கண்ணதாசன்

15. 'ஆரமும் அகிலும்' என்பதன் இலக்கணக் குறிப்பு .............
அ) உம்மைத் தொகை ஆ) வேற்றுமைத் தொகை இ) பண்புத்தொகை ஈ) எண்ணும்மை

**பகுதி - II / பிரிவு - 1**

**II.** எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 4×2=8
(21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க:
அ) சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர்.
ஆ) பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் பிறந்தவர்.

17. 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்-இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

18. தேம்பாவணி - குறிப்பு வரைக.

19. ''காலக் கழுதை கட்டெறும்பானதும்'' கவிஞர் செய்தது என்ன?

20. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

21. ''இன்மையின்'' எனத் தொடங்கும் திருக்குறளை எழுது.

**பிரிவு - 2**

**III.** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 5x2=10

22. தொடர்மொழி என்றால் என்ன?

23. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.
அ) இன்சொல் ஆ) எழுகதிர்

24. பொழிந்த - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. வெண்பா, ஆசிரியப்பாவின் ஓசைகளை எழுதுக.

26. தொழிற்பெயர்களின் பொருளிற்கேற்பத் தொடர்களை முழுமை செய்க.
அ) பசுமையான ...........ஐக் .......... கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
ஆ) காட்டு விலங்குகளைச் ....... தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் .......... திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)

27. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றுக.
நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

28. கலைச் சொற்கள் தருக. அ) Belief ஆ) Philosopher
செவிமாற்றுத் திறனாளருக்கான மாற்று வினா.
கீழ்க்காணும் ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக. அ) திருச்சிராப்பள்ளி ஆ) மன்னார்குடி

**பகுதி - III / பிரிவு - 1**

**IV.** எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி 2x3=6

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை எழுது

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்குவிடையளி.
அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறும் அவையம் பற்றி ''அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்'' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அற அவையம் தனிச் சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது என்கிறது.
அ) அறஅவையம் எங்கு தனிச்சிறப்புப் பெற்றது?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

ஆ) துலாக்கோல் போல் நடுநிலைமிக்கது எது?

இ) 'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என்று கூறும் நூல் எது?

31. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

## பிரிவு - 2

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2x3=6

வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்கவும்

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக

34. அடிபிறழாமல் எழுதுக. ''நவமணி வடக்கயில் போல்'' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல் அல்லது ''சிறுதாம்பு தொடுத்த'' எனத் தொடங்கும் முல்லைப் பாட்டு பாடலினை எழுதுக .

## பிரிவு - 3

VI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி : 2x3=6

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36. அலகிட்டு வாய்பாடு தருக. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

37. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

## பிரிவு - 4

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி 5x5=25

38. 'காலக் கணிதம்' கவிதையில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்ட கருத்துகளுள் உங்களைக் கவர்ந்த ஐந்து கருத்துகளை எழுது.

அல்லது

ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை அழகுற விவரிக்க.

39. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

அல்லது

மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. சந்திரன் தன் தந்தை பாபு அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினராக வேண்டினான். அவரும் சந்திரனிடம் 500 ரூபாயும், 15 பாரதி நகர், வள்ளல் தெரு, திண்டுக்கல் மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்குச் சென்ற சந்திரனாக தேர்வர் தன்னைக் கருதி, கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் எழுதி அட்டவணைப்படுத்து (அல்லது)

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range, poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage-plays,



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukural, Tholkaappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. Apart from literature, karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133 - foot - high statue of Thiruvalluvar in honour of the scholar.

செவிமாற்றுத் திறனாளருக்கான மாற்று வினா. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒரு துளி அவனுக்குள்ளே சமூகம்-சமூகத்துக்குள்ளே அவன் மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப்பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும். சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்கலாம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால் சங்ககால அறங்கள் இயல்பானவை.

(i) மனிதன் எப்படிப்பட்டவன்?

(ii) மனிதனுக்கு எப்போது மகிழ்ச்சி பெருகுகிறது?

(iii) மகிழ்ச்சி பெருக்கில் திளைக்க மனிதன் என்ன செய்ய வேண்டும்?

(iv) அறநெறிக்காலம் எனப்படுவது எது?

(v) சங்ககால அறங்கள் எப்படிப்பட்டவை?

## பகுதி - V

**V. அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். 3x8=24**

43. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்தினை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (அல்லது)

போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக்கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

Padasalai.Net

44. அழகிரி சாமியின் ''ஒருவன் இருக்கிறான்'' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக. (அல்லது)

'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக் குறிப்புச் சொற்களும், புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

45. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை - ''சாலைப் பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு'' - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - 'விபத்தினைத் தவிர்ப்போம்' - 'விழிப்புணர்வு தருவோம்' - முடிவுரை (அல்லது)

பள்ளி ஆண்டு விழாவிற்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு : நூலின் தலைப்பு - மையப்பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com